336

...தச் சுடர்—போரி 1

A

சுயராஜ்யம் யாருக்கு?

(Swaraj to whom?)

முதற்பாகம்

தோழர் M. சிங்காரவேலு, பி.ஏ., பி.எல்.,
அவர்கள் எழுதியது

25 APR 1932

வெளியிடுவோர்
...ம் கம்பெனி
...ட்டித் தெரு, மதராஸ்
1931

[விலை ஒரு அணா

R34
N31.
120496

"குடி அரசு"

சுயமரியாதை இயக்கத்தின் தலைமைப் பத்திரிகை

உயர்ந்த கருத்துக்களுடன், குறைந்த சந்தாவில் வெளிவரும் இப்பத்திரிகையை யாவரும் வாங்கிப் படிக்கவேண்டும். அச்சமற்ற கண்டனம்! ஆணித்தரமான அபிப்பிராயம்!

வருடச் சந்தா ரூபாய் 3—0—0.

ஒரு வருஷ சந்தாவை முன்பணமாக அனுப்பி ஆர்டர் செய்வோருக்கு குடி அரசுப் பிரசுரம் எட்டணா விலையுள்ளது இனாமாக அனுப்பப்படும். இன்றே உங்கள் ஆர்டரை அனுப்புங்கள்!!

விலாசம் :—பப்ளிஷர்,
"குடி அரசு",
ஈரோடு.

"குமரன்"

(வாரப் பதிப்பு)

செட்டிமார் நாட்டிற் கணிகலமான இப்பத்திரிகை அரிய விஷயங்களுடனும், ஹாஸ்யத் துணுக்குகளுடனும், இனிய கதைகளுடனும் யாவரும் விரும்பத் தக்க முறையில் வெளியிடப்படுகின்றது.

வருடச் சந்தா ரூபாய் 5—0—0.

உடனே சந்தாதாரராகச் சேர்ந்துகொள்ளுங்கள்!

விலாசம் :—மானேஜர்,
"குமரன்",
காரைக்குடி.

1

சுயமரியாதைச் சுடர் - போறி 1

சுயராஜ்யம் யாருக்கு?

(Swaraj to whom?)

முதற்பாகம்

25 APR 1932

தோழர்

ம. சிங்காரவேலு, பி.ஏ., பி.எல்.

அவர்கள் எழுதியது

1101
320.158

முதற் பதிப்பு

வெளியிடுவோர்

கற்பகம் கம்பெனி

257, லிங்கிசெட்டித் தெரு

G. T. மதராஸ்

1931

காபிரைட்]

[விலை: ஒரு அணா

2

முகவுரை

தமிழ்நாட்டுச் சகோதர சகோதரிகளுக்கு,

இச்சிறு புத்தகமானது 'சுயமரியாதைச் சுடர்' என்னும் புத்தக வரிசையில் முதலாவதாவதாகும். இத்தகைய சிறு புத்தகங்களில் சுயமரியாதைக் கொள்கைகளையும், தேச முன்னேற்றத்திற்கானமற்றும் பல விஷயங்களையும் எளிய நடையில் பல பிரபலஸ்தர்களைக்கொண்டு எழுதுவித்துச் சொற்ப விலையில் விற்கத்தக்கதாகப் பல புத்தகங்கள் வெளியிடவேண்டுமென்பது எனது நெடுநாளைய ஆசை. அது இப்பொழுது பூர்த்தியாவதைக் காண மகிழ்ச்சியே. இந்த வரிசையில் வெளிவந்த இப்புத்தகத்தையும் இனி வெளிவாவிருக்கும்மற்றப் புத்தகங்களையும் யாவரும் வாங்கிப் படிக்கவேண்டுமென்று வேண்டிக்கொள்கிறேன். எல்லோரும் வாங்கிப் படிப்பதற்கனுகூலமாக விலை புத்தகமொவ்வொன்றுக்கும் ஓர் அணாவே வைக்கப்பட்டுள்ளது. சுயமரியாதை இயக்கவளர்ச்சியில் ஆர்வமும், தேசப் பாமர ஜனங்களுக்கு ஞானமுண்டாக்குவதில் சிரத்தையுமுள்ள அன்பர்கள் இப்புத்தகங்களை ஏராளமாக வாங்கி எளியோருக்கு இலவசமாகக் கொடுத்துதவினாலும் மிக்க நன்மையாகவிருக்கும்.

இந்தப்புத்தக வரிசைக்குப் புத்தகங்கள் பல எழுதி உதவச் சுயமரியாதைத் தலைவர்கள் பலர் முன்வந்துமிருக்கின்றனர். எனவே புத்தகங்கள் அடிக்கடி தொடர்ச்சியாக வெளியிடப்படும். நமது அன்பர்கள் எல்லோரும் ஆதரித்து உதவுவார்களாயின் அதுவே அவர்கள் நமக்குச் செய்யும் பேருதவியாகும்.

இங்ஙனம்:

23—12—31
சென்னை

ப. சு. தண்டபாணி
உரிமையாளர், கற்பகம் கம்பெனி

சுயமரியாதைச் சுடர் - பொறி 1.

சுயராஜ்யம் யாருக்கு?

(Swaraj to whom?)

முதற்பாகம்

1. முன்னுரை

சுயராஜ்யம் யாருக்கு? இந்தக் கேள்விக்குக் காலஞ் சென்ற தேசபந்து தாஸ், 1922-ம் ௵ கயாவில் கூடிய காங்கிரஸ் கூட்டத்தில் விடையளித்துள்ளார். அதாவது, இனி வரும் சுயராஜ்யம் இந்திய தேசத்தில் வாழும் மக்களில் நூற்றுக்குத் தொண்ணூற்றெட்டுப் பேருக்கு என்று அவர் கூறினார். இவர்கள் யார் எனில் பஞ்சை பனாதிகளாகிய முப்பது கோடி பாமரமக்களே. மிகுதியுள்ள சிறுபான்மையோருக்குச் சுயராஜ்யம் வேண்டாமோ வெனில், அவர்கள் உலகில் கிடைக்கக்கூடிய ஆதிக்கம் சம்பத்து முதலிய சுகபோகங்களை அனுபவித்து வருவதால் அவர்களுக்குச் சுயராஜ்யம் வந்தாலு மென்ன? வாராவிட்டாலு மென்ன? என்று எண்ணினார் போலும்! இந்த முப்பது கோடி மக்களின் சமூக, அரசியல், பொருளாதார நிலைமைகளை இப்பொழுது சற்றுக் கவனிப்பாம்.

2. ஆங்கில அரசின் பயன்

பலவிதக் காரணங்களால் இந்தியாவில் பெரும்பான்மை யோருக்கு வறுமையும், பஞ்சமும், கடனும் மேலிட்டிருக் கின்றன. முக்கியமாக இங்கிலீஷ் ராஜ்யம் அதிகச் செல வையுடையதா யிருக்கிறதாம்! இங்குப் பலவித வரிகளால் வசூலாகும் பணம் பலவிதச் செலவுகளுக்காகச் சீர்மைக்கு அனுப்பப்படுகின்றது. முக்கியமாக இங்கிருந்து வேலை செய்துவிட்டுச் சீர்மைக்குப் போயிருக்கும் உத்தியோகஸ்தர் களுக்குக் கொடுக்கப்படும் பென்ஷன் அங்கே யிருந்து கொண்டு ஆக்ஷி நடத்தும் இந்தியா ஆபீஸ் (India office) சம்பளச் செலவு, சீர்மைப் பணத்தால் இந்தியாவில் ஏற்படுத் தப்பட்டுள்ள ரெயில்வேக்கள், வர்த்தக சாலைகள், தொழிற் சாலைகள், மின்சார சக்தி சாலைகள், பாங்கிகள் முதலிய ஸ்தா பனங்களுக்கு வாங்கிய கடனுக்குக் கொடுத்துவரும் வட்டி, இங்கே நடக்கும் வேலைகளுக்காக வேண்டி அங்கே வாங் கும் சாமான்களின் கிரயம், ஆகிய இவைகளுக்கு அதிக மாகச் செலவு செய்யப்படுகின்றதாம். அதுவும் போதா மல், ஆங்கில ஏகாதிபத்தியத்திற்கு வெளிநாடுகளின் பேரில் செய்யும் படை எடுப்புக்குச் செலவாகும் செலவும், இந்திய வரும்படியி லிருந்தே கொடுக்கப்படுகின்றதாம்! இத்தகைய செலவுகளால் இந்த நாடு தரித்திரத்தில் மூழ்கிக் கிடக்கின் றது. முப்பது கோடி இந்திய மக்கள் இதன் பயனைச் சதா இல்லாமையிலேயே இருந்து வாடி வருகின்றனர். நாட்டில் வசூலிக்கப்படும் வரிகளும் அதிகம். நிலத்தின்பேரில் சர்க் காரும், சர்க்கார் ஏஜெண்டுகளாகிய ஜமீந்தார்களும் விதிக் கும் அதிகமான வரிகளால் பயிர் செய்யும் குடிகளுக்கு வரு மானம் குறைந்து கடன்பட வேண்டியதாகின்றது. இந் திய நாட்டுக் குடிகள் பட்டிருக்கும் கடன் பாத்யம் ஐந்நூறு

கோடிக்குமே லிருக்கின்றதாம்!! இதனால் பயிரிடும் குடிகள் வறுமையாலும் பஞ்சத்தாலும் பீடிக்கப்படுகின்றார்களாம்!! பெரிய உத்தியோகஸ்தர்களுக்குக் கொடுத்துவரும் சம்பளத்தாலும் அதிகச் செலவாய் விடுகின்றது. சீர்மையி லிருந்து வந்திருக்கும் உத்தியோகஸ்தர்களுக்குக் கொடுக்கும் அபரிமிதமான சம்பளத்தாலும் செலவு அதிகப்படுகின்றது. இந்தக் காரணங்களால் சொற்ப உத்தியோகஸ்தர்களாகிய நாட்டுச் ஜனங்களுக்குச் சம்பளம் குறைவாகின்றது. இவ்வருமானக் குறைவுகளால் பல லக்ஷக்கணக்கான சொற்ப உத்தியோகஸ்தர்களுக்கு வருமானம் ஜீவனத்திற்குப் போதாமலிருந்து வருகின்றது. வருமானத்தில் குறைவு நேர்ந்தால் ஜீவனக் குறைவு ஏற்படுகின்றது. ஜீவனக் குறைவினால் பிணி, மூப்பு, சாக்காடு ஏற்பட்டு அவற்றின் பயனாகப் பல கோடி ஜனங்கள் வருந்தி, வாழவும், மாளவும் நேரிடுகின்றது. பிரிட்டிஷ் ஆக்ஷியின் பயன் இதுதான் போலும்!!

3. சுதேசிக்கு உதவியின்மை

சுதேச சாமான்கள் செய்ய சர்க்கார் உதவி புரியாமையால், அயல் நாட்டுச் சரக்குகள் அபரிமிதமாக இந்நாட்டில் விலையாகின்றன. இதனால் இந்திய நாட்டுப் பணம் பல கோடி வெளி நாடுகளுக்குப் போகின்றது. இதனாலும் தேசம் ஏழ்மையாகிவிட்டது. வெளி நாட்டு வஸ்திரம் விற்பதற்காக உள்நாட்டுத் துணிமேல் வரிபோடுவதாலும் ஏழைகள் இன்னும் பரம ஏழைகளாகி விடுகின்றனர். இந்த நாட்டில் உற்பத்தியாகும் பொருள்களைக் கொண்டு வேண்டிய செய்பொருள்களைச் செய்துகொள்ள வேண்டியதற்கான சலுகைகளை சர்க்கார் செய்து கொடுத்து உதவி புரியாமையால் தேசியக் கைத்தொழில்கள் க்ஷீணித்து விட்டன. அ

னால் பல்லாயிரம் கைத்தொழில் புரிவோருக்கு வேலை இல்லாமல் போய்விட்டது. இதனாலும் வறுமை அதிகரித்து வருகின்றது. இந்தப் பொருளாதார நஷ்டமும் பிரிட்டிஷ் ஆட்சியின் பயன்தானும்!! உண் பண்டம், தின் பண்டங்களாகிய சர்க்கரை உப்பு முதலிய வஸ்துக்களின் பேரிலும் கூட வரிகள் போடுவதால் அவைகளைச் சரிவர வாங்கி உண்பதற்குப் பெரும் பான்மையோருக்குச் சக்தி இல்லாமல் போய்விடுகின்றது.

4. இந்தியச் சேனைச் செலவு

நாட்டின் பாதுகாப்புக்கு வேண்டிய சேனைக்கு அதிகமாக வைத்திருக்கும், சிப்பாய், சோல்ஜர்மாருக்குச் செலவு செய்யும் பணம் ஐம்பது கோடிக்குமேல் ஆகின்றது. இதனால் பொது ஜனங்களின் கல்விக்கும் (Education) நீர் வசதிகளுக்கும் (Irrigation) வியவசாயத்திற்கும் (Agriculture) இதில் பத்தில் ஒரு பங்குகூடச் செலவு செய்ய முடிவதில்லை. இத்தியாதி பிரிட்டிஷ் ஆக்ஷியின் குறைகளை, தாதாபாய் நவரோஜி, ரோமேஷ் சந்திர தத்தர், டிக்பி, இண்டுமான், ஸர்க்கார், சர்மா, வெப், பனர்ஜீ, பெசண்டம்மை முதலிய பெரியோர்கள் மிக்க நன்றாக எடுத்துக் காட்டி யுள்ளார்கள்.

5. கிராம வாசிகளின் நிலைமை

கன்னியா குமரி முதல் இமய மலை வரையுள்ள பட்டணங்களிலும் கிராமாந்தரங்களிலும் வசித்து வரும் கோடா கோடி மக்களுக்கு வசிக்கத் தகுதியான வீடுகள் கிடையாது. எங்கேயோ ஒரு மாளிகைப் பக்கத்தில் ஆயிரம் குடிசைகள் இருக்கின்றன. பம்பயாகட்டும், கல்கத்தா வாகட்டும், அல்லது சென்னப்பட்டண மாகட்டும் எங்கும் ஏழை

கள் வசிக்குமிடம் கேவலமே. ஒரு சிறு அறையில் நாலு ஐந்துபேர் குழந்தை குட்டிகளுடன் வசித்து வருவது சகஜம். இவ்வித அறைகள் லக்ஷக்கணக்காக இருந்து வருகின்றன. இன்னும் கட்டப்பட்டும் வருகின்றன. சில தனவந்தர்கள் கட்டியுள்ள மாளிகையில் பல குடும்பங்கள் சௌகரியமாக வாழலாம். ஆனல், அதில் ஒருவர் இருவரே வசிக்கின்றுர்கள். ஏழைகள் வசிக்கும் வீடுகளில் ஒருவர் கூட சுகவாழ்வுடன் தங்கியிருக்க முடியாது. ஆனல் அதில் நாலைந்துபேர் குழந்தை குட்டிகளுடன் வசிக்க வேண்டியிருக்கின்றது. இந்தக் காட்சியைப் பட்டணத்தில் பார்க்கலாம். கிராமங்களிலோ அதைவிட மோசமான நிலைமை!! கிராமங்களில்தான் நமது நாட்டிலுள்ள முப்பத்தி ஐந்து கோடி ஜனங்களில் முப்பது கோடி மக்கள் வசித்து வருகின்றுர்கள். அவர்களுடைய வாழ்வு மிகவும் பரிதபிக்கத் தக்கதே! இவர்கள் வசிப்பது பெரும்பான்மையும் குடிசைகளிலேயே! இரண்டொரு பானை சட்டிகளைத் தவிர நாற்காலியோ, மேஜையோ அங்கு ஒன்றும் காணக் கிடைக்காது. இருட்டில் அகல்ஒன்று மினுமினுவென்று வெளிச்சம்கொடுக்கும். அருகாமையில் மாடு, ஆடு, பன்றி வசித்து வரும். அக்கம் பக்கங்களில் ஓடும் நதிக் கரையிலேயோ அல்லது இருக்கும் குளக்கரையிலேயோ, அங்குள்ளவர்கள் மல ஜல பாதைக்குத் தங்குவார்கள். மழைக் காலத்தில் சேறும் தண்ணீரும் கிராம முழுமையும் சுற்றி இருக்கும். குடிசைப் பக்கங்களில் கால்வாய் ஓடும். கிராமக் கால்வாய்களுக்குப் போக்குக் கிடையா. எங்கும் நாகதாளி சூழ்ந்திருக்கும். ஜனப் போக்கு வரத்துக்கு ஒழுங்கான ரஸ்தாக்களிருப்பதும் துர்லபம். கிராமங்களில் பொது விளக்குகளாவது பொதுப் புத்தக சாலைகளாவது பள்ளிக்கூடங்களாவது இருப்பது ஏகதேசம்! இந்த நிலைமையில் எந்த

சுவாமிக்காவது ஒரு கோவில் கட்டப்பட்டிருக்கும். கிராமக் கோவில்களுக்கு தினசரி யாரும் போவதில்லை. ஆனால் கொள்ளை நோய்வரும் காலங்களில் பிரார்த்தனை செய்வோரும், பொங்கலிடுவோரும், ஆடு, கோழி காவுகொடுப்போரும், ஏராளமாகப் போவதைப் பார்க்கலாம்!! கிராமங்களின் அருகில் பயிரிடும் நிலங்களிருக்கும். இவைமத்தியில் அநேகக் கிராமங்களிருக்கின்றன. கிராமவாசிகள் பகற்காலங்களில் நிலங்களை உழுதோ, பயிரிட்டோ வேலைசெய்து வருவார்கள். பயிரிடும் குடிகளுடைய திரேகம் மெலிந்தே யிருக்கும். சாதாரணமாகப் பயிரிடும் குடிகளில் பலாஷ்டியரைப் பார்ப்பதரிது. எலும்பும் தோலுமாகவே பெரும்பான்மையோர் காணப்படுவர்!!!

6. குடியானவர் உணவும் உடையும்

இந்தக் குடிகளருந்தும் உணவை இதர நாடுகளில் நாய்கள்கூடத் தொடா! காலையில் கேழ்வாகுக் கூழே அவர்களது ஆகாரம். மத்யானமும் அந்தக்கூழே! அது கூடச் சிலருக்குப் பஞ்சமாய்விடும்!! இவர்கள் உடுத்திக்கொள்ளும் ஆடைக்குப் பெட்டியே வேண்டியதில்லை! இருந்தால் ஒரு ஓலைப்பெட்டியில் இரண்டொருகந்தையும், பெண்களின் இரண்டொரு கிழிந்த சேலையும் பார்க்கலாம்!! குழந்தைகளுக்கோ அக்கந்தைகூடக் கிடையாது!!! பிறந்தவாறு வளரும் குழந்தைகள் கோடியே!!! நாம் வாழும் இந்த இந்தியாவில் வசித்துவரும் குடிமக்களுடைய நிலைமையைக் குறித்து எழுதும் போது நெஞ்சம் துடிக்கின்றது! கண்களில் நீர் ஊற்றெடுத்துப் பெருகுகின்றது!! இவர்களுக்கு விமோசனமில்லையா? சராசரி ஓர் இந்தியனின் தினசரி வருமானம் ஓர் அணுவாம். இதைக் கொண்டு அரிசி முதலிய சாமான்கள் வாங்கி வாழ்வை நடத்தவேண்டும். இத்தகையோர் சதா பசியால்

வருந்தாமல் வேறு என்ன செய்வார்கள்? தலைமுறை தத்துவமாக இதே வாழ்வுதான்! உணவுக்கு அதிகம் கஷ்டப்பட்ட சந்ததியார் எமபுரத்திற்குப் போயும் ஜீவித்திருப்பர்!! சதா வறுமையிலேயே வாழ்ந்தே வருகின்றார்கள்!! ஓய்வு நேரத்தில் இவர்களே தங்களது குடிசைகளைக் கட்டிக் கொள்வதாலும், உடுக்கத்துணி அதிகமாக வேண்டாமையாலும்,சொற்ப வாழ்வை இவர்களால் நடத்த முடிகின்றதென்று வித்வான் கில்பர்ட்டு சிலேட்டர் எழுதுகின்றார்!!!

7. வறுமைக்குக் காரணம்

குடிமக்களின் ஏழ்மைத்தனத்திற்கு இன்னொரு காரணமும் உண்டு. ராம ராஜ்யகாலத்தில் பயிர் செய்தது எவ்விதமோ அவ்விதமே இன்றைக்கும் பயிர்செய்து வருகின்றனர். நவீன முறைகளைக்கொண்டு பயிர்செய்வதில்லை. அடிக்கடி குடும்பங்கள் செய்து கொள்ளும் பாகப் பிரிவினையால் பிரிந்த குடும்பத்தின் நிலம் மிகவும் குறைவுபட்டுக் கொண்டே வருகின்றது. சிறுசிறு தரையில் பயிரிட்டா ஒரு குடும்பத்தின் வயிறு நிறையும்? உழவுக்குத் தகுந்த கலப்பைவாங்கவும் குடிகளுக்கு சக்தி இல்லை! வாங்கினாலும் அதைக்கொண்டு உழ மாடு இல்லை!! இந்த நிலைமையில் என்ன பயிர் செய்து பிழைப்பது? மாட்டெருவை வறட்டியாக்கி அதைவிற்று விடுவதாலும் போதுமான எரு கிடைப்பதில்லை. ஓய்வு நேரங்களில் தகுதியான வேறு வேலையும் இல்லை! இந்த நேரங்களில் சர்க்காவைக் கொண்டு நூல் நூற்று காலணா அரையணாவாகிலும் சம்பாதியுங்கள் என்கிறார் நமது மகாத்மா."

8. குடிகளுக்கு நிலம் சொந்தமில்லாமை

பயிரிடும் குடிகளை வருத்துவது மேற்கூறியவை மட்டுமல்ல. இன்னும் பல காரணங்களால் குடிமக்கள் காலா

காலமாக வருந்தி வருகின்றனர். இவர்களில் முக்கால்வாசிப் பேருக்கு ஒரு செண்டு நிலம் கூடச் சொந்தமில்லை. நிலச்சுவான்தார்கள் வேறு, பயிரிடும் குடிகள் வேறு. இக்குடிகளில் வாரத்திற்குப் பயிரிடுவோர் சிலர். கூலிக்குப் பயிரிடுவோர் சிலர். இவர்கள் வருமானம் கைக்கும் எட்டாது, வாய்க்கும் எட்டாது. வாரத்திற்குப் பயிரிடுவோர் விளைவு செய்ததில் பாதியோ, முக்காலோ நிலச்சுவான்தார்களுக்குப் போய்ச் சேருகின்றது. கூலிக்கு வேலை செய்வோனுக்கு அவன் விளைவித்த விளைவில் யாதொன்றுமில்லை. இது முதல் கஷ்டம்!

9. நிலத்தீர்வை அதிகம்

இரண்டாவது நிலத்தீர்வை அதிகப்பட்டுக் கொண்டே வருகின்றது. கவர்ண்மெண்டுக்குக் கட்டவேண்டிய தீர்வை ஒருவாறாக விருந்தாலும், ஜமீன்தாரர்களுடைய தீர்வை கொடுக்க முடிகிறதில்லை. சில வேளைகளில் ஜமீன்தாரர்களால் விளைவில் எழுபதுபங்குக் குறையாமல் வரி வசூலிக்கப்படுகின்றதாம். மீதியைக்கொண்டு எந்தக் குடும்பம் ஜீவிக்க முடியும்?

10. வீண் வழக்கில் பிரியம்

மூன்றாவதாகக் குடிகளில் பெரும்பான்மையோர் படிக்காதவர்கள். உயர்ந்த நோக்கத்தின் பயனை அவர்களறியார்கள். அற்ப சொற்ப விஷயங்களுக் கெல்லாம் சண்டையிட்டு வழக்குக்குச் செல்வார்கள். துர்வழக்குகளை விலைக்கு வாங்க அனந்தம் பேர் கிராமங்களி லிருக்கின்றார்கள். இந்த வழக்குகளைப் பிடித்துக்கொள்ள கோர்ட்டுக்களும், லாயர்களும், தேசமெங்கும் நிறைந்திருப்பதால், இப்பொழும் மனிதர் வழக்கிடவும் சலியார்! பணத்தை இழக்கவும் சலியார்!! லக்ஷக்கணக்கான குடும்பங்கள் வழக்குகளாலேயே நொந்து

போகின்றன. இதனாலேயே வீடுவாசல், நிலம் நீர் இழந்து நாட்டைவிட்டுப் பட்டணங்களுக்குச் ஜீவனம் செய்யப் போகின்ற குடிகள் அனந்தம்.

11. மதங்களின் கொடுமை

நான்காவது, குடி ஜனங்களை ஏழைகளாக்கவே மதங்களும், ஆசாரங்களும், துணைகளாக விருந்து வருகின்றன. சுபா அசுபங்களில் சிக்கனமாகச் செலவு செய்து பிழைக்கும் வழியை நமது புரோகிதரும், குருக்களும் காட்டுவதில்லை. குடியானவன் தூளி என்றால், புரோகிதன் நிர்த்தூளி என்கின்றான். சடங்குகளை வளர்த்து ஏழாநரகத்திற்கு மப்பால், பாழாம் நரகத்திலிருந்து செத்தவர்கள் பட்டவர்களை இழுக்க மந்திர தந்திரங்களைக்காட்டிக் காசுபறிப்பதினாலும் பலர் ஏழைகளாகி விடுகின்றனர். பிரார்த்தனையில் எவ்வளவு செலவு? முடி எடுப்பதில் எவ்வளவு செலவு? காது குத்துவதில் எவ்வளவு செலவு? கழிப்பு எடுப்பதில் எவ்வளவு செலவு? பூசையில் எவ்வளவு செலவு? பூசாரிக்குக்கொடுத் தழுவதில் எவ்வளவு செலவு? இந்த மூட நம்பிக்கைகளுக் கெல்லாம் நமது நாட்டுமதங்கள் துணையாகநின்று லக்ஷக்கணக்கான குடும்பங்களை அலையச் செய்து விடுகின்றன. இந்த வியர்த்தங்களெல்லாம் போதாதென்று, கோவில்களுக்கென்றும், குளங்களுக்கென்றும், நதிகளுக்கென்றும், யாத்திரை போவதென்கிற ஓர் துர்ப்பழக்கத்தையும் மதக்குருமார்கள் நியமித்துள்ளார்கள். காசியாத்திரை, ராமேஸ்வர யாத்திரை, கயா யாத்திரை, திருப்பதி யாத்திரை முதலிய பிரயாணங்களுக்கெல்லாம், செலவு கோடிக்கணக்கில் ஆகின்றது. இவற்றில் உயிர் இழப்போர் எவ்வளவு? இத்தியாதி செலவுகளுக்கும் நிலத்தின் வருமானம் போதுமானதாகுமா? இவைகளுக்கெல்லாம் கடன்தான் வாங்கநேரிடுகின்றது. கடன் கொடுப்போர்

ஒவ்வொரு கிராமத்திலும் இருக்கின்றனர். இவர்களிடம் நிலத்தைக் கொதுவைவைத்தால் அது மீளப்போவதில்லை. விஷம்போல் ஏறும் வட்டியே அதை விழுங்கிவிடும். இம் மாதிரியாகக் கடன்பட்ட குடியானவர்களும் அனந்தம். கடன்பட்ட நெஞ்சுக்கு என்ன சுகமுண்டு?

12. ஜாதி வித்தியாசக் கொடுமை

ஐந்தாவது ஜாதிக்கொடுமையும் பலவுள. கல்யாணம், கருமாந்திரம் முதலிய காலங்களில் நடத்தும் செலவுகளை மட்டு மிஞ்சி செய்வதால் ஏழைகளாகிப் பாதவிப்போர் எத்தனைபேர்? ஜாதியாருக்கு இடுவதில் போட்டி போட்டுக் கெட்டவர் எத்தனைபேர்? ஜாதிக்கொழுப்பால் வழக்கிட்டுக் கெட்டவர் எத்தனைபேர்? இவ்வித வீண் வியர்த்தச் செலவுகளால் பஞ்ஞிகளாய் விட்டவர் எத்தனைபேர்? நமது மதங்களாலும், ஜாதி வேற்றுமைகளாலும் துர்ப்பழக்க வழக்கங்களாலும் ஜாதி சமய ஆசாரங்களாலும், மூட பக்தியாலும், கோவில்களாலும், குளங்களாலும், புரோகிதர்களாலும் குருமார்களாலும், மந்திர தந்திரவாதிகளான மாயக்காரர்களாலும், கெட்டழிந்து வரத் துர்ப்பாக்கியம் பெற்றவர்களாக விருக்கும் நமது நாட்டாருக்குத் துன்பங்களுக்குக் குறைவேது? ஜாதி வேற்றுமையின் கொடுமையினால் நமது சமூகத்தி லேற்பட்டிருக்கும் பிளவுகளுக்கும் ஒற்றுமை யின்மைக்கும் அளவேது? இந்தச் சங்கடங்கள் எல்லாம் எப்பொழுது நம் நாட்டைவிட்டு ஒழியுமோ அப்பொழுதுதான் நம் நாடு சுகப்படும்! நமது நாட்டைப் பீடித்திருக்கும் வறுமையும் தொலையும்!

13. சமூக வாழ்க்கையின் கொடுமை

இன்னும் நம்மவர்களுக்குச் சமூக வாழ்க்கையிலேனும் சுகமுண்டா? குழந்தைப் பருவத்திலேயே அமங்கலியான

பெண் குழந்தைகள் ஒரு கோடிக்குமேலிருக்கிறதாம். பால்யத்தில் மணந்து பலவீனமடைந்த பால்யர்கள் ஒரு கோடியாம். மறுவிவாகம் செய்து கொள்ள விருப்பமுள்ள விதவைகள் கோடிக்கணக்காக இருந்தும் அவர்களைச் செய்ய விடாத கொடுமையை என் செய்வது? ஆங்கில அரசில் விதவா விவாகம் செய்து கொள்ளலாமெனத் திட்டமேற்பட்டிருந்தும் அதைச் செய்ய விடாத கொடூரப்பழக்கத்தை ஆதரிப்போரை என் செய்வது? பால்ய பருவத்திலேயே பிள்ளைகளுக்குக் கல்யாணம் செய்வித்து நாட்டைப் பாழ்படுத்தும் பச்சாதாபமற்றவர்களை என் செய்வது? நமது சமூகத்தைப் பற்றியுள்ள இவைபோன்ற துராசாரக் கொடுமைகளை நீடித்திருக்க விடுவதாலேயே பிணியும் சாக்காடும், துன்பமும் பெருகிக்கொண்டே வருகின்றது.

14. ஜனங்களின் அற்பவயது

நமது நாட்டில் சிசு மரணம் அதிகம். அகால மரணம் நம் நாட்டில் குடி கொண்டு இருக்கின்றது. நமது நாட்டில் பிறக்கும் குழந்தைகளில் மூன்றிலொரு பங்கு இறந்து விடுகின்றனவாம். குழந்தைகள்கதி இவ்வாறானல் முதியோர் கதி என்னகும்? முதியோரில் ஆயிரத்துக்கு முப்பது பேர் சாகின்றனர். ஆனல் மேல் நாடுகளில் ஆயிரத்துக்கு பதினெருவரே இறக்கின்றனர்களாம். நமது துர்ப்பழக்க வழக்கங்களே இந்த அகால மரணங்களுக்கு மூலகாரணமெனவறிக! திருஷ்டாந்தமாகப் பெண்களின் பிரசவகால ஏற்பாட்டை எடுத்துக்கொண்டு பார்ப்போம். கர்ப்பவதியை ஜாதி சமய ஆசாரங்களால் தீண்டாதவளாக்கி விட்டு, பிரசவகாலத்தில் எங்கோ ஓர் மூலையில் அழுக்கும் கந்தையும் நிறைந்துள்ள இடத்தில் வைத்துப் பிரசவிக்க விடுகின்றனர். மருத்துவச்சி கீழ்ச்சாதியிலிருந்தே வரவேண்டுமாம்! அவள் மருத்துவ

ஜாதியாகவே யிருக்கவேண்டுமாம்!! அவளுக்கு பழக்க ஞானமே யொழிய வேறு எதார்த்த ஞானம் கிடையாது. இந்த சந்தர்ப்பங்களில் பிறக்கும் குழந்தையும் தாயும் அடிக்கடி உயிர் துறப்பது ஆச்சரியமா? நமது சமூக வாழ்க்கைகளின் தீமைகள் யாவும் பண்டைய ராமராஜ்யப் பழக்கவழக்கங்களை ஆதரிப்பதனால் வரும் கேடென அறிக! நவீன ஞானத்தை இழிவு செய்வதால் வரும் கேடெனவுமறிக!!

15. பெண்களின் நிலைமை

'மடமை என்பது மாதர்க்கணிகலம்' என்னும் முதுமொழியால் நமது நாட்டுப் பெண்ணினத்திற்கு நேர்ந்த கேட்டைச் சொல்லவும் வேண்டுமா? உலகிலுள்ள ஸ்திரீகளை விட இந்திய நாட்டிலுள்ள ஸ்திரீகள் அறியாமையில் மூழ்கிக்கிடக்கின்றார்கள். சமூக வாழ்க்கையிலும், பொருளாதார வாழ்க்கையிலும், அவர்கள் தாழ்ந்தே இருந்து வருகின்றனர். கிராமங்களில் வேலை இல்லாத காலங்களில் ஸ்திரிகள் கும்பல் கும்பலாக நின்று சீலைப்பேனையும் தலைப்பேனையும் வேட்டையாடும் காக்ஷி அவர்களுடைய அசுத்தத்தையும் அறியாமையுயையும் காட்டுகின்றது. உலகம் எம்மாதிரியாக நடந்து வருகின்றதென்பதைப்பற்றி இவர்களுக்குச் சிந்தனையே இல்லை. இவர்களுடைய வாழ்வு வீட்டு வேலையைச் செய்வதிலும், சொற்பகாலம் வயல்களில் சொற்ப வேலைகளைச் செய்வதிலும் முடிவு அடைகின்றது. இவர்களுடைய மன இருளை நோக்கியே நமது கவிகள் "புலபுலெனக் கலகலெனப் புதல்வர்களைப் பெறுவீர்! காப்பதற்கும் வகை அறியீர்!..." என்று பாடியுள்ளார் போலும்!! வடஇந்தியா முழுமையும், ஸ்திரிகள் வெளியேபோகவொட்டாது 'பர்தா' என்ற துர்ப்பழக்கம் வாட்டி வருகின்றது. வங்காளத்தில் ஆண்களைவிடப் பெண்கள் அதிகமாகச் சாகின்றனர். அதைக் கண்டுதெ ஓர் ஆங்கில வாசி கல்கத்தா நகரத்தை

'தாயைக்கொல்லும் நகரம்' (Matricidal City) என்றார். இது "பர்தா"வின் கொடுமையே. கல்வி பெரும்பான்மையான பெண்களுக்கு எட்டவே இல்லை. நூற்றுக்கு மூன்று பேர் நான்கு பேர்கூடப் படிக்கவில்லை என்றால் இந்தியப் பெண்களின் மௌடீகத்தனத்திற்கு எல்லையேது? இவ்வாறான அந்தகாரம் வேறெங்குளது? ஒரு பக்கம் மூடத்தனத்தாலும், மற்றொரு பக்கம் துர்ப்பழக்க வழக்கத்தாலும், இன்னொரு பக்கம் பொருளாதாரக்குறைவாலும், வேறொரு பக்கம் ஆடவர் ஆதிக்கத்தாலும் வதைந்து வாடும் நமது சகோதரிகள் — தாய்மார்களுடைய துர்ப்பாக்கியம், டாண்டி (Dante) என்னும் கவிராயர் கூறும் நரகத்திலும் (Inferno) இல்லை என்று சொல்லலாம்!!

16. பொதுக்கல்வி இன்மை

உலகிலுள்ள தேசங்களில் அறியாமையில் மிகுந்திருப்பது நமது இந்திய நாடே. அநாகரிகப் பழக்கவழக்கங்களிலும் மிகுந்திருப்பது நமது நாடே. பொதுக் கல்வியில் குறைந்திருப்பதும் நமது நாடே. இங்கு வாழும் முப்பத்தைந்து கோடி ஜனங்களில் படிக்கத் தெரிந்தவர்கள் ஐந்து கோடிக்குமேலில்லை. இங்கிருக்கும் பல கோடிப் பெண் பிள்ளைகளில் படிப்பவர்கள் ஐம்பது லக்ஷத்திற்குமேலில்லை. இந்த அந்தகார இருளை ராமராஜ்ய மாமூலைக்கொண்டு எந்தக் காலத்தில் போக்குவார் காந்தியார்? பிரிட்டிஷ் ராஜ்யத்தினுள்ள குறைவுகளில் இந்த மானிட இருளைக் கடந்த நூற்றைம்பது வருஷமாக நீக்காதது பெருத்த குறைவேயாகும். சென்ற பத்துப் பனிரண்டு வருஷ காலத்திற்குள் பதினாறு கோடி மக்களைப் படைத்த ரஷ்யாவில் படிப்பின்மையைப் போக்கிவிட்டார்களென்றால், அதே காலத்துக்குள் மூன்று கோடி மக்களைப் படைத்த துருக்கி கல்வி இன்மையை நீக்கி

விட்டதென்றால், நமது நாட்டின் தலைவர்களின் அசிரத்தையை என்னவென்று அழைப்பது? இங்குப் படிப்புக்குச் செலவாகும் பணம் மிகக் குறைவே. ஆங்கில நாட்டில் ஒரு மாணக்கனுக்கு வருஷ மொன்றுக்கு நூறு ரூபாய் செலவானால் நமது நாட்டுப் பிள்ளை யொன்றுக்கு மூன்று ரூபாய் மூன்றரை ரூபாய்தான் செலவாகின்றது. இது வெட்கக் கேடில்லையா? சட்டசபைகளிலும், முனிசிபாலிடி, தாலுக்கா, ஜில்லா போர்டுகளிலும், கடந்த ஐம்பது வருஷங்களாக அங்கம் வகித்த அங்கத்தினர்கள் என்ன செய்து வந்தனரோ? அது அவர்களைப் படைத்ததாகச் சொல்லும் ஈசனுக்குத் தான் தெரியும் போலும்!! அவர்கள் முயற்சியாவும் சுயநலத்திற்காக உபயோகித்திருக்கலாமோ?

17. மத மாச்சரியக் கொடுமை

இந்தியாவில் இந்துக்கள் பதினாறுகோடியும் முகம்மதியர் ஆறுகோடியும் வாழ்கின்றனர். இவர்களிருவருக்கும் பூனைக்கும் எலிக்குமுள்ள நேசமென்றே சொல்லலாம். அடிக்கடி சொற்பகாரியங்களுக்கெல்லாம், மதத்தை முன்னிட்டுத் தலைகளை உடைத்துக் கொள்ளுகின்றார்கள். மத வைராக்கியத்திற்கு ஒருவரை யொருவர் கொல்வது தற்போது இந்த உலகில் எங்குமில்லை. இந்தியாவில் மாத்திரம் தான் இந்தமாச்சரியம் நிகழ்கின்றது. இருதாத்தாருடைய தலைவர்களும் எரியும் கொள்ளியை ஏறத்தள்ள ஆரம்பித்து விட்டார்கள். சங்கதன் என்றும் சுத்தி என்றும் ஆரம்பித்து இந்து ஆகாமத்தைப் பலப்படுத்த இந்துத் தலைவர்கள் பாடுபடுவதைக் கண்ட மகம்மதியர் தன்ஸீம் என்று கூறி தங்கள் மதத்தைப் பாதுகாக்க ஆரம்பித்து விட்டார்கள். செத்தவன் புட்டம் தெற்கே இருந்தாலென்ன? வடக்கே இருந்தாலென்ன? என்று நினைத்து எந்த மதத்தில் எவன் இருந்தா

லென்ன வென்று போகாமல் நமது மதத் தலைவர்கள் தத்தம் மதங்களைப் பாதுகாக்கும் நிமித்தம், மதமாறுதல் அடைந்தவர்களைத் தத்தம் மதத்திற்குச் சேர்த்துக்கொள்ள முயற்சி செய்யத் தலைப்பட்டதும், மதவைராக்கியமும், மதப்பித்தும் அதிகரித்து, எங்கும் இருதாத்தாரும் குழப்பத்திலும், கலகத்திலும் ஈடுபட்டுவருகின்றார்கள். "பாலுக்கும் காவல் பூனைக்கும் தோழனாக" நடிக்கும் காங்கிரஸ் செய்து வரும் முயற்சி யெல்லாம் பயனில்லாமல் போகின்றது. முற்போக்கடைந்து வரும் தேசங்களில் மத விஷயமாகக் கைக்கொள்ளப்படும் மனப்பான்மை நமது நாட்டுத் தலைவர்களுக்கு இல்லாமையாலேயே, இந்தியாவில் மதமாச்சரியங்கள் பலமடைந்து வருகின்றன என அறிக. இந்த மாச்சரியக் கொடுமைகள் நிறைந்த மதங்களை உதறித்தள்ளி, யாவும் கற்பனைகளாமெனப் பாமரஜனங்களுக்குச் சென்ற பத்து வருஷங்களாக நமது தலைவர்கள் சற்றுச் சிரமப்பட்டாவது தெரிவித்து வந்திருப்பார்களாயின், இந்த ஆபத்தான நிலைமை தேசத்தில் தோன்றியிராது.

18. ஜாதி வேற்றுமையால் வருங் கேடு

மதங்கள் ஒருபக்கம் வருத்த ஜாதிவேற்றுமையாலும் நமது நாடு சிதறுண்டு கிடக்க நேரிட்டது. மதப்பற்றுடனும் ஜாதிவேற்றுமையுடனும் யாரும் பிறப்பதில்லை. நடுவில் தோன்றிய தோற்றங்களே இவை யிரண்டும். இந்த இரண்டும் மனிதனுடைய அறியாமையையும் அகங்காரத்தையும் வளர்க்க வந்த பழக்க வழக்கங்களே யாகும். இவை ஒருவனை ஒருவன் தாழ்வுபடுத்திக்கொண்டு இல்வாழ்க்கையைக் கெடுத்துக் கொள்ள ஏற்பட்ட சமூக வித்தியாசங்களென அறிக தேளுக்குக் கொடுக்கும், பாம்புக்கு விஷமும், காடி புலிகளுக்குக் கோரப்பல்களும் தோன்றின மாதிரி மதங்களும்,

ஜாதிகளும் நமது நாட்டு மனிதவர்க்கத்திற்குத் தோன்றின. நமது இந்தியாவிலோ எங்குமில்லாத ஜாதிக் கொடூரம் முளைத்து விட்டது. இதனால் நமது ஜனசமூகம் படும் பாட்டுக்கு அளவே யில்லை. சகோதரத்துவம் என்ற பேச்சு ஜாதி உள்ள வரை இந்தியாவில் வெறும் பேச்சே. மந்திர தந்திரங்களால் நோயைப் போக்க முடியாததுபோல நமது சமூகப் பெருநோயாகிய ஜாதி என்னும் நோயைக் கள்ள நியாயத்தால் போக்க முடியாதென அறிக. பூணூலைத் தரித்துக்கொண்டு அதற்குரிய ஜாதிச் சடங்குகளைச் செய்துகொண்டு, ஜாதியை விட்டு விட்டதாகச் சொல்லும் நமது பெரியோர்களின் சொற்கள் கள்ள நியாயமென அறிக. இந்தக் கள்ள நியாயம் இந்தியருக்குள் வெகு காலமாக இருந்து வருகின்றது. வேதாந்திகளும், காந்தியார் உள்பட காங்கிரஸ்காரர்களும், ஜாதி விஷயமாகச் சொல்லிவருவது இந்த மோசடி வழக்கே. பிரம்மஞானிக்கு ஜாதி இல்லையாம்! ஆனால் அவன் விவகாரத்திலிருக்கும்வரை ஜாதி அனுசரிக்க வேண்டியதாம்!! இந்த நியாயம் அபிப்பிராயத்திற்கும் நடக்கைக்கும் முரண்படுகின்றதே என்றால், அது வேத ஒழுக்கமாம்!!! இந்த "வழுக்கத் தலை நியாயத்தை"க் கொண்டு ஜாதிமத ஆபாசங்களைத் தழுவி வருவதால் ஜாதி வொழியாமல் பல்லாண்டுதோறும் இந்தியர் ஒற்றுமையைக் கலைத்துக் கொண்டே வருகின்றது.

19. தீண்டாமை

இந்த நியாயத்தால்தான் தீண்டாமையும் நமது நாட்டைவிட்டு நீங்கினபாடில்லை. இந்தத் தீமைக்குள்வைக்கப் பட்டுள்ளார் சுமார் ஆறுகோடி என்று சொல்லுகின்றார்கள். இவர்களுடைய வாழ்வு பொருளாதாரக் குறைவால் மதசம்பந்தத்திலும், சமுகவாழ்க்கைகளிலும், மிகவும் தாழ்த்தப் பட்டுள்ளது. இவர்களை மீட்பதெப்படி? இது இந்தியப்

பிரச்னைகளில்முக்கிய பிரச்னையாகும். மூலாதாரத்தில் இந்தப் பிரச்னை பொருளாதார வித்தியாஸத்தினுல் ஏற்பட்டது. பிறகு இந்தத் தீண்டாமை ஜாதிமதவிகற்பமாக எண்ணப் பட்டுள்ளது. இந்த ஜாதிமதப் பான்மை இந்தியருக் குள் ளிருக்கும்வரைத் தீண்டாமை ஒழியுமென்பது வீண் எண்ணமே.

20. ஆங்கில இந்தியர் கூட்டம்

இந்தக் கூட்டத்தார் இடையில் இந்தியாவில் உண்டான வகுப்பார். ஆங்கில மக்கள் நமது தேசத்திற்கு வந்த பிறகு அவர்கள் மூலமாக இந்த வகுப்பார் தோன்றியுள்ளார்கள். இவர்களுடைய நிலைமை திரிசங்கு சுவர்க்கத்தைப் போலிருக் கிறது. இவர்களுடைய நடையுடைபாவனை ஆங்கிலேயர்களைப் பின்பற்றியுள்ளன. இருப்பினும் ஆங்கில ஜன சமூகத்தில் இவர்களைச் சேர்ப்பதில்லை. இந்து ஜனங்களிடத்திலும் இவர் கள் பழகுவதில்லை. ஆனுல் இவர்கள் யாவரும் இந்தியமக்க ளெனப்படுவதற்குச் சந்தேகமில்லை. இவர்களுடைய நிலைமை மிக தாழ்ந்தே யிருக்கின்றது. இந்தக் கூட்டத்தில் அதிகம் படித்தவர் சிலரே. ஆதலின் அரசியலில் பெரும்பதவி இவர் களுக்குக் கிடைப்பதில்லை. தாழ்த்தப் பட்டவர்களைப்போல் இவர்களும் சிறுபான்மையோ ரெனப்படுபவரே. (Minorities) இவாகள் தங்களுக்குப் பாதுகாப்பு வேண்டுமென வாதிக்கின்றனர். இந்தியப் பொதுஜன சமூகம் இத்தியாதி வித்தியாசங்களாலும், பழக்க வழக்க வேற்றுமையாலும், அறிவின்மையாலும், கல்வி பரவாமையாலும் சிதருண்டு கிடந்துவரக்கண்டோம். இவர்களது பொருளாதார நிலைமை யைச் சற்று விளக்குவோம். இவர்கள் வருமானம் உடலையும் உயிரையும் காப்பாற்றக் கூடியதாக இல்லை என்பதை இந் தியப் பொருளாதார சாஸ்திரத்தைப் படித்தவர்கள் யாவரும்

ஒரே சம்மதமாகத் தெரிவித்துள்ளார்கள். அதிகமான வருமானத்தை யுடையவர்களும், நிலம் நீர் படைத்தவர்களும் உத்தியோகத்தில் சம்பாதிப்போரும், வைத்யம், லாயர் தனம், வர்த்தகம் முதலிய தொழிலைச் செய்வோரும் நீங்கலாக, மீதியுள்ளவர்கள் தொழிலாளர் எனப்படுவார்கள். இவர்களில் பெரும் பான்மையோர் கிராமங்களில் வாழ்ந்து பயிர்செய்து பிழைப்போர்களாவர். மற்றவர்கள் பட்டணங்களிலும், நகரங்களிலும், தொழிற்சாலைகளிலும் வேலை செய்து வருபர்கள். இவ்விருவகுப்பார்களில் வியவசாயம் செய்யும் குடியானவர்களுடைய நிலைமையை முன்பாக எடுத்துக் கூறியுள்ளோம். இனிப் பட்டணங்களில் தொழில் புரிந்து வரும் தொழிலாளர் நிலைமையைச் சற்றுக் கவனிப்போம்.

21. தொழிலாளர் நிலைமை

சுமார் மூன்றுகோடி ஜனங்கள் பெரிய தொழிற் சாலைகளடங்கிய ரெயில்வே, பஞ்சு நெசவு, சாயநெசவு தேயிலை, காபி, பயிர், இருப்புச் சுரங்கம் முதலிய வேலை களில் உழைத்துவருகின்றனர். இவர்களுடைய வருமான மும் சாதாரண ஜீவனத்திற்கே போதா. தேயிலைத் தோட் டங்களில் வேலைசெய்வோர் வருமானம், மனிதனுக்குத் தினமொன்றுக்கு ஆறேமுக்கால் அணவும், பெண்ணுக்கு ஐந்தணவும், பத்துப்பனிரண்டு வயதுக் குழந்தைகளுக்கு மூன்று அணவும் ஆகும். இம்மூன்று பேரும் ஒரு குடும்பத் தைச் சேர்ந்திருந்தால் இவர்களுடைய மொத்த வருமானம் தினமொன்றுக்குப் பதினலே முக்காலணவாகும். இதைக் கொண்டு துணிமணி முதலிய அவசியச் செலவுகளைச் செய்து கொள்ளவேண்டும். இந்த வேலை அடிமைவேலைக்குச் சமான மென பிரிட்டிஷ் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் தங்கள் ரிப் போர்ட்டில் வரைந்துள்ளார்கள். மற்றத் தொழிலாளர் வரு

மானமும் இதற்கு அதிகமில்லை. மொத்தத்தில் இந்தியக் கூலிக்கு வருஷமொன்றுக்கு ஐம்பது ரூபாய் வருமானமென சில வருஷங்களுக்கு முன் கணக்கெடுத்திருக்கின்றார்கள். இந்த வருமானத்தை மற்றத் தேசக்கூலிகளின் வருமானத்துடன் ஒப்பிட்டுப் பார்த்தால், நமது நாட்டுத் தொழிலாளிகளின் வருமானம் எவ்வளவு குறைவெனத் தெரிந்து கொள்ளலாம். அகில தேச வருமானம், வேலை ஆள் ஒன்றுக்கு ரூ. 750 அமெரிக்காவில் ரூ. 1000 ஜெர்மனியில் ரூ. 450 ஜப்பானில் ரூ. 100. இந்தக் கணக்குகளெல்லாம் ஒருபுறமிருக்க, நமது நாட்டுத் தொழிலாளியின் எலும்பும் தோலும், குடிசையும், கந்தைகளும், சுத்தமில்லாமையும், அவனுடைய துர்லப வாழ்வைக் கண்ணுக்கு முன்னே காட்டுகின்றனவென ஓர் ஆங்கில தேச நூலாசிரியர் கூறுகின்றார். இந்தியாவில் அடிக்கடி வேலைநிறுத்தங்கள் நேருவதும் இதே காரணத்தால்தான். இந்தியாவில் பசியின் கொடுமையை அனுபவிக்காத வியவசாயியாவது அல்லது தொழிலாளியாவது இல்லை என்று சந்தேகமறக் கூறலாம். மொத்தத்தில் இவர்கள் வாழ்வு அடிமை வாழ்வே. அவர்கள் செய்து வரும் வேலை அவர்களுக்குச் சொந்தமில்லை. எவ்விதப் பாத்யதையும் இவர்களுக்கு நிலத்திலோ, தொழிற்சாலைகளிலோ கிடையாது. இது முதலாவது குறை. இவர்களுக்கு வேலை எந்தக் காலத்திலும் நிச்சயமில்லை. எஜமானன் நினைத்த போது இவர்களைத் தள்ளிவிடலாம். ஆயிரம், பதினாயிரம், லக்ஷக்கணக்கான பேர்களைக்கூட ஒரே நிமிஷத்தில் வேலையிலிருந்து நீக்கிவிட்டு அவர்களைத் தெருவில் அலையச் செய்யலாம். இது இரண்டாவது குறை. வேலை செய்யும் இடங்களில் இவர்களுக்கு எந்த அதிகாரமுமில்லை. மிருகங்களைப் போல் செய்யச் சொன்னதைச் செய்யத்தான் வேண்டும். இல்லாவிடில் வீட்டுக்குப் போகத்தான் வேண்டும். இது

மூன்றாவது குறை. இம்மூன்று குறைகளாலும் பிடிக்கப்பட்ட தொழிலாளிகளும், குடியானவர்களும், நிச்சயமில்லாத வாழ்வை அனுதினமும் பயந்து நடத்திவருகின்றார்கள். நமது தேச வாழ்வு பழைய கவிராயர் சொன்னபடி, "குழவி தாய்முகம் நோக்க, தாய்தந்தைமுகம்நோக்க, தந்தைஅரசன் முகம் நோக்கியவா றென்னலாம்". வறுமையால் பீடிக்கப்பட்டுக் கொள்ளை நோய்களால் எலும்பும் தோலுமாகி அழுக்கும் இருளும் நிறைந்த வீடுகளில் வாசம் செய்துகொண்டு, ஜாதிமதக் கொடுமைகளால் வதைந்து, வைதீகர் குருமார்களின் சூழ்ச்சியால் கடன்பட்டு, அறியாமையில் கட்டுண்டு, கற்பனை வார்த்தைகளாகிய காட்டேறி, முனீஸ்வரனுக்குப் பயந்து, பொங்கலிட்டுப் பூசையிட்டு, பண்டைய முறையையே தொழில்களில் அனுசரித்து, பிழைக்க வகை தெரியாது வாழும் முப்பது கோடி இந்திய மக்கள், எந்தக் காலத்தில் மானுஷீக உயர்தர வாழ்வை அடைவார்கள்? இவர்கள் வாழ்வையும் உயிரையும் அடக்கியாளும் சிறுபான்மையோராகிய தொழிற்சாலைச் சொந்தக்காரர்களும், கப்பல் சொந்தக்காரர்களும், பாங்கி அதிபதிகளும், வீடுவாசல் மாடமாளிகைச் சொந்தக்காரர்களும், நிலச்சுவான்தார்களும், மடாதிபதிகளும், மேற்சொன்ன முப்பது கோடி மக்கள் உழைப்பின் பயனைத் தங்களுடையதாக்கிக் கொண்டு, அதைத் தங்கள் சுகபோகங்களில் வியர்த்தமாக்கி, தாங்களும் கெடுவது மல்லாமல் இந்தியப் பொது மக்கள் வாழ்வையே நாசப்படுத்தியும் வருகின்றார்கள். இதற்கு விமோசனமோ, பரிகாரமோ வொன்று மில்லையா? உலகில் இன்று எங்குமில்லாத நமது இந்திய மக்களின் கொடூர நிலைமையைப் போக்கி நமது இந்திய ஜனங்களுக்கு உயர்தர வாழ்வைக் காட்ட நம் நாட்டில் பற்பல கக்ஷிகள் வேலை செய்துவருகின்றன. அவைகளாவன: முதலில் நமது பிரிட்டிஷ்

ஆக்ஷி, இரண்டாவது நமது தேசியக் காங்கிரசின் சுயராஜ்ய நோக்கம், மூன்ருவது மிதவாதக் கக்ஷி, நான்காவது ஜஸ்டிஸ் கக்ஷி, ஐந்தாவது சுயமரியாதை இயக்கத்தார். ஆருவது இளம்பருவமுள்ள சமதருமக் கூட்டத்தார். இவர்கள் எல்லோருடைய முயற்சிகளின் நியாயங்களைச் சுருக்கமாக ஆராய்வோம். அதன்மூலம் சுயராஜ்யம் யாருக்கு? என்ற வினவின் விடையை விளக்கி வைப்போம்.

22. பிரிட்டிஷ் ஆட்சியின் நலன்

நமது பிரிட்டிஷ் ராஜ்யம் இந்தியாவில் நிலைத்துச் சுமார் நூறு வருஷத்திற்கு மேலாகின்றது. வங்காளக் கலகத்திற்குப் பிறகே இந்தியாவில் பிரிட்டிஷ் ராஜ்யம் சம்பூரணமாக நிலைத்ததாகச் சொல்லலாம். பிரிட்டிஷ் அரசியல் இந்தத் தேசத்தில் கஷ்டமில்லாமல் நிலைக்கவில்லை. அனந்தமாயிரம் பிரிட்டிஷ்காரர்கள் இந்த நாட்டின் பல சண்டைகளில் உயிரைத் தியாகம் செய்தபிறகே இந்த நாட்டைப் பிரிட்டிஷார் ஜெயிக்க நேரிட்டது. பிரிட்டிஷார் இந்தத் தேசத்தை சண்டையில் ஜெயித்தார்களே யொழியச் சமாதானத்தில் பெற்றதில்லை. கர்னடிக் நவாப் சண்டைகள் என்ன? முதல், இரண்டு மூன்று மைசூர் சண்டைகளென்ன? பாஞ்சால சண்டைகளென்ன? மகாராஷ்டிரர் சண்டைகளென்ன? பர்மா சண்டைகளென்ன? ஆப்கன் சண்டைகளென்ன? இன்னும் பல சிற்றரசர்களுடன் செய்த சண்டைகளென்ன? சிப்பாய் கலகங்களென்ன? இத்தியாதி சண்டைகளில் ஜெயங்கொண்டபடியால்தான், பிரிட்டிஷ் கொடிகன்னியா குமரி முதல் இமயமலை வரையிலுள்ள நாடு முழுமையும் பறக்கின்றது. இந்தியாவைச் சுயராஜ்திற்குக் கொண்டுவர வேண்டுமென்போர் இந்த பிரிட்டிஷ் தியாகத்தை மறக்க முடியாது. இவர்களின் நீண்டகால ஆக்ஷியில் இவர்கள் நமது தேசத்தில்

செய்துள்ள வேலைகளென்ன? சென்ற 1930ஆ வெளிவந்த "இந்தியாவின் நெருக்கடி" என்னும், பென்னர் பிராக்வே யினால் பிரசுரிக்கப்பட்டுள்ள சிறு புத்தகத்தில் கண்டுள்ளபடி பிரிட்டிஷார் இந்தியாவில் செய்துள்ள வேலைகளாவன:—

முதலாவது நீர்ப் பாய்ச்சல்களுக்குச் செய்துள்ள மாபெருங் கட்டட வேலைகள் பலவாம். இவைகளால் பயிரிடக்கூடாத நிலங்களைச் சாகுபடி செய்ய உதவி யேற்பட்டது. இவற்றால் மழையை எதிர்பார்க்காமலே பயிர் செய்ய இடங் கொடுத்தது. ஆனால், பிரிட்டிஷாருக்கு முன்பே இந்தியர் இவைகளைப் போன்ற பெரிய வேலைகளை ஏற்பாடு செய்திருந்தார்கள். இது உண்மையே. ஆனால் இந்த வேலைகளுக்குப் பணச் செலவு அதிகமாக ஆயினும் அதற்கு நீர்வரியால் வரும் வருமானம், போட்ட பணத்தைச் சிலகாலம் பொறுத்து முழுமையும் எடுத்துவிடுமன்றோ? இரண்டாவது இந்த வசதிகளால் பயிரிடும் நிலங்களின்மீது வசூலாகும் நிலக்கிஸ்தியும் வருமானமாக வருமன்றோ? ஆதலின் இந்தப் பெருத்த வேலைகளை எடுத்துச் செய்ததால் யாருக்கும் நஷ்டமொன்றுமில்லை. குடிகளுக்கு வசதிகள் ஏற்பட்டால், உத்தியோகஸ்தர்களுக்கும் ஜீவன முண்டு. இதனையும் மறக்கலாகாது! நீர்ப்பாய்ச்சல் இலாக்காவில் எத்தனை உத்தியோகஸ்தர்கள் இருந்து வருகிறார்கள்? எத்தனை வரி வசூலிப்போர், வசூல் வேலையை நடத்துவதற்காக வைக்கப்படுகின்றனர்? இந்த வேலைகளால் குடிகளுக்கு லாபம் மாத்திரமல்ல! அரசு நடத்தும் உத்தியோகஸ்தர்களுக்கும் ஜீவனமுண்டாகின்றதன்றோ?

இரண்டாவது, தேச முழுமையும் ரெயில் போடப்பட்டுள்ளது. ரெயில்வேக்களால், விளைபொருள்கள், தூரத்திலுள்ள ஊர்களுக்கு வினியோகிக்கப்படப் பெருத்த சகாயமாய் விட்டன. ரெயில்வேக்கள் பஞ்சத்தைத் தடுக்கும் ஓர்

கருவியாகவும், ஜனங்கள் பிரயாணத்திற்கு உபயோகப்படும் சிறந்த வசதியாகவு மிருக்கின்றது. தூரமாக யிருந்த நாடு நகரங்கள் ரெயில்வேக்களால் அருகாமையில் கொண்டுவரப் பட்டிருக்கின்றன. சமூக வாழ்க்கையை விருத்தி செய்வதற்கும் ஒற்றுமை செய்வதற்கும் ரெயில்வேக்கள் சாதனமாகி விட்டன. கட்டை வண்டி, குதிரை வண்டி, பல்லக்கு முதலிய பூர்வகாலத்துச் சவாரிகளைவிட ரெயிலில் போவது அதிக அனுகூலமே. ரெயில்வேயின் பலவித உபயோகங்களை யாராலும் மறுக்க முடியாது. மனிதரின் உயர்தர வாழ்வுக்கு இது பெருந் துணையாக ஒருபக்கமிருக்க, அதில் வேலை செய்வோர் வாழ்வுதான் அந்தரத்தி லிருக்கின்றது. இந்திய ரெயில்வேக்களில் வேலை செய்யும் தொழிலாளர்கள் ஏழு லக்ஷமென்கின்றார்கள். இவர்களுடைய தொழில் நிச்சயமில்லாமையே பிரிட்டிஷ் திட்டத்தின் ஒரு பெருங் குறைவாகும். அடிக்கடி ரெயில்வேக்களில் வேலை செய்வோரை, சிக்கனம் என்று கூறி ஆயிரக்கணக்கில் தெருவில் நிற்க விட்டால், ரெயில்வேயின் சிறப்பென்ன? அதன் நன்மைதான் என்ன? அவை போக்குவரத்திற்கும் மற்றும் பல நன்மைகளுக்கும் உதவியாகயிருந்து மென்ன? ரெயில்வே முதலிய போக்குவரத்திற்குரிய ஸ்தாபனங்கள் முதலாளித் திட்டத்தில் இருக்கும்வரை, இவைகளில் வேலை செய்து வரும் பல லக்ஷம் தொழிலாளர்களுக்கு எந்த க்ஷேமமும் கிட்டப் போவதில்லை. மேலும், இந்திய ரயில்வேக்களில் பெரும்பான்மையும் அரசாங்கத்தைச் சேர்ந்தவையாதலால் அவைகளிலும் தொழில் நிச்சய மேற்படாவிட்டால், அந்த ரெயில்வேக்களைப் படைத்திருப்பதினால் யாருக்கு என்ன பெருமை?

மூன்றாவது, தேச முழுமையும் ஆஸ்பத்திரிகளும் சுகாதார ஸ்தாபனங்களும் ஏற்படுத்தியுள்ளார்கள் என்பது. சில

விடங்களில் பிரிட்டிஷார் இவ்வித ஸ்தாபனங்கள் அமைத்துள்ளது வாஸ்தவமே. ஆனால் இந்த தேசத்தில் வாழும் முப்பத்தைந்துகோடி மக்களுக்கும் இப்போதமைக்கப்பட்டுள்ள ஆஸ்பத்திரிகளும், சுகாதார ஸ்தாபனங்களும் போதுமா வெனக் கேட்கின்றோம்? ஆனால் நமது தேசவாசிகள், சுகாதாரத்தைக் கவனியாது, பழைய வைத்தியம், பழைய மந்திரம், பழைய பிரார்த்தனை ஆகியவைகளை நம்பி மோசம் போகின்றார்கள் என்று விடை பகரலாம். எனினும் அந்த மூடப் பழக்கங்களை யொழிக்க ஏன் மெய்ஞ்ஞானத்தைப் புகட்டாமலும், மூடப் பழக்கங்களைத் தடுக்காமலும் இருந்தார்கள் எனக் கேட்கின்றோம்? அரசியல் செலவைப் பார்த்தவர்கள் நாட்டின் சுகாதாரச் செலவு போதாதெனவே கண்டிக்கின்றார்கள். நூறு வருஷங்களாக நாட்டில் அகால மரணத்தைத் தடுத்து ஆயுள் விருத்தியை நாடாதது எந்த ராஜ்யத்திற்கும் பெருத்த குறைவே என்பதற்குச் சந்தேகமில்லை.

நான்காவது நாடெங்கும் நியாயஸ்தலங்கள் ஏற்படுத்தப்பட்டு, வழக்குகள், சண்டைகள் முதலியவற்றைத் தீர்த்துக் கொள்ளும் பொருட்டுச் செய்துள்ள ஏற்பாடுகளே. இவை யாவும் நன்குமதிக்கத்தக்கதே. நாகரிக அரசுகள் எது இருந்தாலும், தேசத்தில், அமைதியும், நியாயமும் கிடைக்கச் செய்தல் அவற்றின் முக்கிய கடமைகளாகும். ஆனால் பிரிட்டிஷ் நியாயஸ்தலங்களால், அமைதி ஏற்பட்ட போதிலும் பொதுவாகத் தேசத்திற்கு நஷ்டமென்பதற்கு ஐயமில்லை. விசேஷக் கோட்டுகளும், நியாயங்களும், ஜட்ஜ்களும், லாயர்களும், நிகழும் தனிவுடமைத் திட்டத்திற்கு வேண்டியவைகளே. என்றாலும் இவைகளால் பாமர ஜனங்களுக்கு யாதொரு நன்மையு மில்லை என்பது நிச்சயம். ஏனி யோருக்கு நியாயஸ்தலங்களால் பயனில்லை என்று ஜட்ஜ் பாரி

என்பவர் சொல்லுகின்றார். எந்தக் காலத்தில் கோர்ட்டு களும், லாயர் ஸ்தாபனங்களும் இந்த உலகை விட்டு வொழி யுமோ அந்தக் காலத்தில்தான் உலகம் சுகப்படும் என்றார் அமெரிக்கா தேசத்து மெய்ஞ்ஞானியாகிய வாட்ஸன்.

கடைசியாக, வரிகளை வசூலிக்கவும், நாட்டு அமைதி யைக் காப்பாற்றவும், நியாயத் தீர்ப்பு செய்யவும் தகுதியான உத்தியோகஸ்தர்களை ஏற்படுத்தியது பிரிட்டிஷ் திட்டத்தின் சிறப்பாகுமாம். இதனை யாரும் மறுப்பாரில்லை. ஆனால் இதன் செலவுதான் மட்டில்லாத செலவாகின்றது. எளிய தேசம் இவ்வளவு தலைகனத்த செலவினத்தைத் தாங்க முடி யாமையால் தான், முக்கியமாக, ஜனசமூக வாழ்வுக்கு அத்தியாவசியமாக வுள்ள, கல்வி, சுகாதாரம், வைத்தியம், வியவசாயம், முதலியவைகளுக்குப் பணம் போதாமையாய் விட்டது. பிரமாதமாகச் செய்துள்ள பிரிட்டிஷ் வேலைகளும், நிர்மாணத் திட்டங்களும் முப்பத்து முக்கோடி மாந்தரின் தரித்திரத்தைப் போக்க முடியவில்லை! வேலை நிச்சயம் ஏற் பட வில்லை! அகால மரணம் நிற்கவில்லை! பிணியைத் தடுக்க வில்லை! கொடிய பழக்கவழக்கங்களினின்று மூடமக்களை மீட்கவில்லை. சாமான்ய ஜனங்களுக்கு மெஞ்ஞானக் கல்வி எட்டச் செய்யவில்லை. உயர்தரக் கல்வியைப் பெரும்பான்மை யோர் அடைய இலவச ஏற்பாடுகள் போதுமானவற்றைச் செய்யவில்லை! சாதாரணக் கல்விகூட இந்திய மக்கள் யாவ ரும் பெறச் செய்யவில்லை! ஏழைத் தாய்மாரையும் பிறக்கும் குழந்தைகளையும், காப்பதற்கு வேண்டிய வசதிகள் நிய மிக்க வில்லை. ஏழைகள் தங்கி வாழப்போதுமானதும், தகுதியுள்ளதுமான வீடுகளைக் கட்டுவிக்கவில்லை! சுகாதார ஸ்தாபனங்களை நாடு முழுமையும், நகர முழுமையும், கிராம முழுமையும், வற்புறுத்தி அமைக்கப்படவில்லை! நவீன முறைகளைக் கொண்டு விளைபொருளை அபிவிருத்தி செய்ய

வேண்டிய வசதிகளை அமைத்துக் கொடுக்கவில்லை. நிலமில்லா தாருக்கு நிலம் கொடுத்தும், நிலமிருந்தும் பயிர் செய்யா தாருக்கு நிலமில்லாமல் செய்தும் விடவில்லை. சகலப் பொருள்களையும், சகல வேலைகளையும், சகலப் பொதுவாக விருக்க வேண்டிய ஸ்தாபனங்களையும் கண்டவனுக்கெல்லாம் விட்டு விட்டு, அவனவன் இஷ்டப்படி நடத்தவிட்டு வரும் தோஷத்தால், பலகோடி இந்தியருக்கு, வறுமையும், பிணியும், மரணமும், அறியாமையும், மதவைராக்யமும், ஜாதிக் கொழுப்பும், வளர்ந்து வருகின்றன. இனிவரும் சரித்திரக்காரரும், நமது சந்ததியாரும், பிரிட்டிஷ் இந்திய ஆக்ஷியை, ரெயில்வேயின் நீட்டத்தினாலும், பெருத்த கட்டிடங்களின் எண்ணிக்கையாலும், போட்டிருக்கும் ரோட்டுக்களினாலும், ஓடும் கப்பல்களினாலும், ஏற்றுமதி இறக்குமதிகளாலும், பொன் நிறைந்துள்ள பாங்கிகளாலும், நடக்கும் வர்த்தகத்தினாலும், கோவில் குளம், மாடமாளிகைகளினாலும் மதிக்கப் போவதில்லை. இந்த அரசின் ஆக்ஷிக்குட்பட்டவர்கள், பசியின்றி வாழ்கின்றார்களா? அகால மரணமின்றி, ஆயுள் விருத்தி அடைந் திருக்கின்றார்களா? பிணியின்றி இருக்கின்றார்களா? ஆடுமாடுகள், குதிரை கழுதைகள் அபிவிருத்தி யடைந்தனவா? ஜனங்கள் ஜாதிமதங்களை ஒழித்து மெய்ஞ்ஞானம் பெற்றிருக்கின்றனரா? மூடபுத்தி, மூடநம்பிக்கை ஆகியவற்றைப் போக்கிப் பகுத்தறிவுட னிருக்கின்றார்களா? ஆண்களும் பெண்களும், சகல விஷயங்களிலும் சமத்துவத்துடன் கூடி வாழ்கின்றார்களா? அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகள், ஒன்றுவது இறக்காமலும், பசித்து அழாமலும் வளர்க்கப்படுகின்றனவா? கிராம முழுமையும் இருளைப் போக்கி எங்கும் வெளிச்சமுண்டாக்கப்பட் டிருக்கின்றதா? சகலரும் சிறந்த கல்வி கேள்விகளை அடைய வேண்டி தகுந்த வஸதிகள் நியமிக்கப்பட் டிருக்கின்றனவா?

"தான்", "தனது" என்ற மனப்பான்மை நீங்கி "நாம்", "நமது" என்ற மனப்பான்மை வளரவைக்கப்பட்டு இருக்கின்றதா? "எனது தேசம்", "உனது தேசம்" என்ற சுயநல தேசீயம் போய், அகில தேசம், அகில வர்த்தகம், அகிலத் தொழிலாளர், அகில ஸ்தாபனம் என்ற மனப்பான்மை வளர்க்கப் பெற்றிருக்கின்றதா? என்ற இத்தியாதி விஷயங்களாலேயே எந்த அரசும் மதிக்கப்படுமே யொழிய மற்ற வீண் பெருமைகளா லல்லவென அறிக.

முதற்பாகம் முற்றிற்று.

குறிப்பு:—இதன் தொடர்ச்சி இரண்டாம் பாகத்தில் வெளிவரும்.

Printen at the Guardian Press, Ltd., Madras.

3°

சுயமரியாதைச் சுடர் - பொறி 2.

"சுயராஜ்யம் யாருக்கு?"

இரண்டாம் பாகம்

(தோழர். ம. சிங்காரவேலு, B.A., B.L., எழுதியது)

மேற்கண்ட புத்தகம் இப்பொழுது அச்சாகி வருகின்றது. அதில் கீழ்க்கண்ட தலைப்புகளின்கீழ் பல அரிய பெரிய விஷயங்கள் விளக்கப்பட்டுள்ளன. அவையாவன :—

23. தேசீயக் காங்கிரசின் சுயராஜ்ய நோக்கம்
24. காங்கிரஸ் அரசியல் திட்டம்
25. கராச்சித் தீர்மானங்கள்
26. தீண்டாமை—ஓர் பொருளாதாரப் பிரச்னை
27. குடியும், குடியாமையும்
28. மிதவாதிகள்
29. ஜஸ்டிஸ் கக்ஷி
30. சுயமரியாதை இயக்கம்
31. மகம்மதியர் பிரச்னை
32. சமதர்மம்

மேற்கண்ட தலைப்புக்களின் கீழ் ஆசிரியர் காங்கிரசின் பல தவறுகளையும் பொருந்தாத நியாயங்களையும் வெகு விஸ்தாரமாகக் கூறியிருப்பதுடன் காங்கிரஸ் கோரும் சுயராஜ்யம் ஏழைகளுக் கல்லவென்பதையும் பணக்காரர்களுக்கும் சில படித்தவர்களுக்குமே என்பதையும் தெளிவாக எடுத்துக் காட்டியிருக்கின்றார்.

விலை அணா ஒன்றுதான்.

உடனே உங்கள் ஆர்டரைப் பதிவு செய்துகொள்ளுங்கள்.

விலாசம்:—கற்பகம் கம்பெனி
257, லிங்கி செட்டித் தெரு
ஜி. டி. மதராஸ்

"சுயமரியாதைச் சுடர்"

சுயமரியாதைக் கொள்கைகளை நாடெங்கும் பரவச் செய்வதற்காக மேற்கண்ட வரிசையில் அடிக்கடி புத்தகங்கள் வெளியிட ஏற்பாடு செய்திருக்கின்றோம். யாவரும் வாங்கிப் படிப்பதற் கனுகூலமாக எல்லாப் புத்தகங்களுக்கும் "விலை ஒரு அணா" ஏற்படுத்தியு மிருக்கின்றோம். சுயமரியாதை இயக்கத் தத்துவங்களை இவற்றின் மூலம் எளியநடையில் எழுதி வெளியிடப்படும். பல பிரபல சுயமரியாதைத் தலைவர்கள் இத்தகைய சிறுபுத்தகங்கள் பல எழுதி உதவ முன் வந்துள்ளார்கள்.

இவ்வரிசையில் தொடர்ச்சியாகப் பிரசுரங்கள் வெளி வரும். அவற்றை யாவரும் வாங்கிப் படிக்குமாறு வேண்டிக் கொள்வதுடன் சுயமரியாதை இயக்க வளர்ச்சியில் ஆர்வமுள்ள அன்பர்கள் இவற்றை ஏராளமாக வாங்கி ஏழைகளுக்கு இலவசமாகக் கொடுத்து உதவும்படிக்கும் கேட்டுக் கொள்ளுகின்றோம். இப்பேருழியத்தை மேற்கொள்ளும் அன்பர்கட்குத்தாராளமாகக் கமிஷன் தள்ளிக்கொடுக்கப்படும்.

தமிழ் நாடெங்கும் இவற்றை விற்க ஏஜெண்டுகள் தேவை

ஏராளமான கமிஷன்! தாராளமான நிபந்தனைகள்!

விபரம் வேண்டுவோர் உடனே எழுதவும்

விலாசம்:—கற்பகம் கம்பெனி

புஸ்தக இலாகா

257, லிங்கி செட்டித் தெரு, ஜி. டி. மதறாஸ்

சேவி சம்பந்தமான சகல வியாதிகளுக்கும்
சிறந்த ஔடதம்

கர்ண ரஞ்சன்

இந்த அபூர்வமான மருந்தை உபயோகித்த மாத்திரத்தில் காது வலி, குத்தல், சீழ் வடிதல், காதிரைச்சல், மந்தம் முதலிய சகல வியாதிகளும் ஆச்சரியகரமான முறையில் நிவர்த்தியாகிவிடும். இது பலவித அபூர்வ மூலிகைகளைக் கொண்டு தயாரிக்கப்பட்டது. ஒரு முறை பரீக்ஷித்துப் பார்த்தால் உண்மை விளங்கும்.

புட்டி ஒன்றுக்கு விலை ரூ. 1. வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

விலாசம் :— கர்ண ரஞ்சன் டிப்போ,
395, பைகிராப்ட்ஸ் ரோட்,
ராயப்பேட்டை போஸ்டு, மதராஸ்.

புஸ்தகங்கள்

1. இற்றுலிப் புரட்சி அல்லது கரிபால்டி—
விலை அணா ஒன்று.
2. குடிகாரர் மகா நாடு— விலை அணா ஒன்று.
3. சுயமரியாதை சமத்துவப் பாடல்கள்—
விலை அணா ஒன்று.

இந்தப் புஸ்தகங்கள் வேண்டுவோர் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம். மூன்று புத்தகங்களும் ஒரே தடவையில் வாங்குவோருக்குத் தபால் செலவு இல்லை. புத்தகம் வேண்டுவோர் தபால் பில்லைகள் அனுப்பவும்.

விலாசம்:—கற்பகம் கம்பெனி
257, லிங்கிசெட்டி தெரு
ஜி. டி. மதராஸ்

ALWAYS DRINK
YELLOW
AVARAMBU
HEALTH
BEVERAGE.

மஞ்சள்

ஆவாரம்பூ பானத்தூள்

(ரிஜிஸ்தர் செய்யப்பட்டது)

காப்பி, டீ முதலியவற்றிற்குப் பதிலாக
உபயோகிக்கப்படுவது

இது ஒவ்வொரு வீட்டிலும் இருக்கவேண்டியது. டாக்டர்களால் சிபார்சு செய்யப்பட்டது. காப்பி, டீ, குடித்து என் தேக சௌகரியத்தைக் கெடுத்துக் கொள்கிறீர்கள்? இது தேகக் குளிர்ச்சியும் ஆரோக்கியமும் உண்டாக்கும்! பசிதீபனத்தை அதிகப்படுத்தும்! தேக பலத்தை விருத்தி செய்யும். வாங்கிப் பரீக்ஷித்துப் பாருங்கள்!

100 கப் தயாரிக்க அரை பவுண்டு போதுமானது!! (விலை எட்டணா)

1929௵ லாகூர் காங்கிரஸ் பொருட் காட்சியிலும், திருவாங்கூர் பட்டாபிஷேகப் பொருட் காட்சியிலும், மைசூர் தசரா பொருட் காட்சியிலும் நற்சாக்ஷிப் பெற்றது.

C. V. பாண்டியா அண்டு கம்பெனி,
16/17, சகண்டு லைன் பீச், மதராஸ்.

"சண்ட மாருதம்"

சுயமரியாதைத்
தமிழ் தினசரிப் பத்திரிகை

சுயமரியாதை இயக்கத் தினசரியாகிய இப்பத்திரிகையை எல்லோரும் வாங்கிப் படிக்கவேண்டும். ராய்ட்டர், அசோசியேடட், செய்திகள் நேரே தருவித்து வெளியிடப் படுகின்றன. லண்டன் ஸ்பெஷல் தந்திகளும் வெளி வருகின்றன. அழுத்தமான அபிப்பிராயமும் ஆராய்ச்சி மிக்க கட்டுரைகளும் இதில் இடம் பெறுகின்றன. மெய்க் கூச்செறிக்கும் 'மின் வெட்டும்' அறிவைப் பெருக்கும் 'அஷ்ட திக்கும்' தேனினுமினிய 'திரட்டுப் பாலும்' சொல்வீரனாகிய வில் விஜயனின் 'சாமாரி'யும், ருசிகரமான குறிப்புக்களும், நகைச்சுவை மிக்க கதைகளும் இதில் காணலாம். நாடெங்கு மிருந்து நிருபங்களும் பிரசுரிக்கப் படுகின்றன. தமிழராய்ப் பிறந்தோர் ஒவ்வொருவர் கையிலும் இது இருக்க வேண்டியது அவசியம்.

சந்தா விபரம்

உள் நாடு மாதச் சந்தா ரூ.	1—0—0.
தனிப் பிரதி	0—0—6.

விலாசம்:—மானேஜர்,
"சண்ட மாருதம்",
திருச்சினாப்பள்ளி.

e Guardian Press, Ltd., Madras.